சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–30.06.2020

**<u>சாதாரணக்கூட்டம்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, சார்வரி வருடம் ஆனி மாதம் 16–ஆம் நாள் ( ஜீன் திங்கள் 30–ஆம் நாள்:– 30.06.2020) செவ்வாய் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.4, காந்தி நகர் காலனி 7வது தெரு மற்றும் வார்டு எண்.19, விஸ்வன்குளம் ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய் பதிக்கும் பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு 22.05.2020–ஆம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன்,பரமத்தேவன்பட்டி – 0.25% மதிப்பீடு விட அதிகம்.
2. திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.10% மதிப்பீட்டை விட குறைவு.

அலுவலகக் குறிப்பு:– **மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2–இல் காணும் திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் 0.10% குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **43, நாள்.30.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய சாலைவரி (Road Tax) தொகையினை ரொக்கமாக செலுத்த உத்தமபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நேரில் சென்று கேட்பு அறிய பெற்றதை தொடர்ந்து கீழ்க்கண்ட வாகனங்களுக்கு உத்தேச செலவினத் தொகை ரூ.32000/– (ரூபாய் முப்பத்து இரண்டாயிரம் மட்டும்) மன்றத்தின அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வாகன எண். | வாகன விவரம் |
|---|---|---|
| 1. | TN60Z2921 | டிராக்டர் |
| 2. | TN60S9443 | காம்பாக்டர் |
| 3. | TN60V8239 | டிப்பர் லாரி |
| 4. | TN60T4228 | டம்பர் பிளேசர் |
| 5. | TN60W1755 | டம்பர் பிளேசர் |

அலுவலகக் குறிப்பு:– **1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட செலவு மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **44 , நாள்.30.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சியின் எல்கைக்குட்பட்ட வார்டு எண்.2, பொன் நகர் பகுதியில் ரூ.3.40 இலட்சம் மதிப்பீட்டில் கேட் வால்வில் இருந்து தனியாக புதிய மெயின் குழாய் அமைப்பதற்கு நகர்மன்ற தீர்மான எண்.31, நாள்.29.05.2020 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 12.06.2020–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | 0.26% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் 0.10% குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1531/2020/இ2)**

**தீர்மான எண், நாள்** **45, நாள்.30.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி, பிரிண்டர் மற்றும் கணினி தொடர்பான உபகரணங்கள் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.30, நாள்.29.05.2020 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து இவ்வாண்டிற்கான (2020–2021) பணியை செய்வதற்கு 12.06.2020–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | மெர்குரி சாப்ட்வேர்– பெரியகுளம் | ரூ.3700/– |
| 2. | ஸ்வேதா சிஸ்டம்ஸ் – மதுரை | ரூ.4700/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மெர்குரி சாப்ட்வேர் நிறுவனம் பெரியகுளம், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1456/2020/இ2)**

**தீர்மான எண், நாள்** **46 , நாள்.30.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் கொரோனா (Covid-19) வைரஸ் தொற்று நோய் 26வது வார்டு பத்மநாபசாமி கோவில் தெருவில் வசிக்கும் நபர் ஒருவர் பாதிக்கப்பட்டதால், மேற்படி வைரஸ் தொற்று மற்ற பகுதிகளுக்கும் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, பத்மநாபசாமி கோவில் பகுதி முழுவதும் கண்காணிப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டதால், பத்மநாபசாமி கோவில் பகுதி முழுவதும் தடை அரண் (Baricade) ஏற்படுத்தும் பணி மேற்கொண்டமைக்கு (அனைத்து தெருக்களையும் மரங்கள் கொண்டு அடைத்து தரத் தேவையான உபகரணங்கள் மற்றும் கூலி உட்பட) ஒரு மீட்டருக்கு ரூ.216/– வீதம் 119.50 மீட்டர் தடை அரண் அமைத்த பணிக்கு விலைப்புள்ளிதாரர் திரு. கா.வனராஜ் என்பவருக்கு ரூ.28909/–ஐ வழங்கவும், மேற்படி செலவினத்தை 1920–ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–இன் கீழ் மேற்கொண்டதையும் (அரசு கடித எண்.74/JS/(MA)/Finance/Salaries/2020, நாள்.01.04.2020இன்படி) மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **பதிவு செய்யலாம். (ந.க.எண்.1223/2020/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **47, நாள்.30.06.2020** |
| **தீர்மானம்** | **பதிவு செய்யப்பட்டது.** |

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீர் உறிஞ்சும் கிணற்றினை தூர் எடுக்கும் பணி மற்றும் மேற்படி கிணற்றினை சுற்றியுள்ள பெரிய பள்ளத்தினை சரி செய்யும் பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.9.96 இலட்சத்திற்கு 22.05.2020–ஆம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 0.10% மதிப்பீட்டை விட குறைவு
2. திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.25% மதிப்பீட்டை விட அதிகம்.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் 0.10% குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **48, நாள்.30.06.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.7

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.22, முதலியார் தெரு, அங்கு விலாஸ் ரைஸ்மில் தெரு மற்றும் முத்துராக்குச் சந்து ஆகிய பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான மெயின் சாலை மட்டத்திற்கு கழிவு நீர் கால்வாய் சாலையினை உயர்த்திக் கட்டும் பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு 22.05.2020—ஆம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 0.15% மதிப்பீட்டை விட குறைவு
2. திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.20% மதிப்பீட்டை விட அதிகம்.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:— | **மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1—இல் காணும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் 0.15% குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **49 , நாள்.30.06.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்குச் சொந்தமான நகர்நல மருத்துவமனை மேற்கூரை சரி செய்யும் பணி மேற்கொள்ள 25.06.2020—ஆம் நாளன்று வரப்பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 0.20% மதிப்பீடு விட அதிகம்
2. திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.15% மதிப்பீடு விட குறைவு

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:— | **மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2—இல் காணும் திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் 0.15% குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **50 , நாள்.30.06.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்குச் சொந்தமான சங்கிலியார் திடலில் அமைந்துள்ள கல்யாண மண்டபம் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள 25.06.2020–ஆம் நாளன்று வரப்பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.P.பவுன், ஒப்பந்தக்காரர் – 0.10% மதிப்பீடு விட குறைவு
2. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.15% மதிப்பீடு விட அதிகம்

அலுவலகக் குறிப்பு:– **மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.P.பவுன் ஒப்பந்தக்காரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் 0.10% குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **51, நாள்.30.06.2020**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சிறுமின்விசை பம்புகளில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு தேவையான உதிரிபாகங்கள் வாங்கி இருப்பில் வைத்துக் கொள்வதற்கும், உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.20 இலட்சத்துக்கு (ரூபாய் நான்கு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4467/2019/இ2)**

**தீர்மான எண், நாள்** **52, நாள்.30.06.2020**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்குச் சொந்தமான நேருஜீ பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலைய கடைகள், உணவகம் மற்றும் கட்டணக் கழிப்பறைகளை நகர்மன்றத் தீர்மான எண்.665, நாள்.18.07.2016 ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடை எண்.27–ஐ 05.07.2017, 02.08.2017, 05.09.2017,11.10.2017, 15.11.2017, 24.01.2018, 26.04.2018, 31.07.2018, 21.08.2018, 24.10.2018, 28.12.2018, 19.02.2019, 21.06.2019, 19.09.2019, 17.10.2019–ஆம் தேதிகளில் கோரப்பட்டது. மேற்படி தேதிகளில் நடைபெற்ற மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. மேற்படி ஒரு கடைக்கு 19.06.2020ம் தேதி மறு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வைப்புத் தொகை செலுத்தி வரப்பெற்ற ஒரே ஒரு கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | கடை எண் | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை (தொகை) |
|---|---|---|---|
| 1. | 27 | S.A.சேக் முகமது த/பெ.S.அப்துல்கரீம், 15.01.59, சிவானந்தநகர், தென்றல் நகர், பழனிச்செட்டிபட்டி, தேனி. | ரூ.2300/– |

அலுவலகக் குறிப்பு:– ஒரு கடை எண்.27க்கு 15 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. தற்போது 19.06.2020ம் தேதிகளில் கோரப்பட்ட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு.S.A.சேக் முகமது என்பவர் கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி கடை எண்.27க்கு உச்சபட்ச மாத வாடகையாக ரூ.2300/– கோரியுள்ளார். இத்தொகையானது அருகிலுள்ள கடைகளுக்கு உள்ள வாடகைத் தொகைக்கு சற்று குறைவாக உள்ளதாலும் நகராட்சிக்கு நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

தீர்மான எண், நாள் 53 , நாள்.30.06.2020

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

*******

## பொருள் எண்.12

இந்நகராட்சியின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான குளோரின் சிலிண்டர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.35, நாள்.29.05.2020 அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேலும் பணி செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி 15.06.2020ம் நாள் அறிவிப்பு செய்யப்பட்டதில், வரப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை (1 எண்ணம் சிலிண்டர்) |
|---|---|---|
| 1. | சத்யா டைஸ் அன்ட் கெமிக்கல்ஸ் நிறுவனம் | ரூ.23954/– |
| 2. | பியூப்பில் கெமிக்கல்ஸ் & இண்டஸ்ட்ரிஸ் நிறுவனம் | ரூ.25960/– |

அலுவலகக் குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. **வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய ஸ்ரீ சத்யா டைஸ் & கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2381/2011/இ2)**

**தீர்மான எண், நாள்** **54 , நாள்.30.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.13

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் எண்.TN60S2751க்கு வருடாந்திர காப்பீடு 25.07.2020ம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும் ஒரு வருட காலத்திற்கு (26.07.2020 முதல் 25.07.2021 வரை) காப்பீடு புதுப்பிப்பு செய்வதற்கு தொகை ரூ.12801/–யை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6260/2014/இ2)

**தீர்மான எண், நாள்** **55, நாள்.30.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகன எண்.TN60Z5198க்கு வருடாந்திர காப்பீடு 25.07.2020ம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும் ஒரு வருட காலத்திற்கு (26.07.2020 முதல் 25.07.2021 வரை) காப்பீடு புதுப்பிப்பு செய்வதற்கு தொகை ரூ.9370/–ஐ யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4458/2014/இ2)**

**தீர்மான எண், நாள்** **56, நாள்.30.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.15**

சின்னமனூர் நகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப்பணிகளின் கீழ் நடைபெறும் பணிகள் அனைத்தையும் அரசு விதிகளை பின்பற்றி ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998இன் விதிகளை பின்பற்றி கணினியில் பதிவேற்றம் செய்யவும், ஒப்பந்தப்புள்ளிகளை நகராட்சியில் பதிவிறக்கம் செய்யவும் தேவைப்படும் எண் இலக்க ஒப்புதல் சான்று (Digital Signature Certificate) நகராட்சி ஆணையர் மற்றும் குடிநீர்ப் பணி மேற்பார்வையாளர் ஆகியோர்களுக்கு மதுரை பார்கவன் கன்சல்டன்சி மூலம் தலா 1 எண்ணம் பெற்றமைக்குரிய தொகை ரூ.4000/– திரு.வை.முத்துவேல், குடிநீர் பணி மேற்பார்வையாளருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **அனுமதிக்கலாம்.**
2. **அவசரப் பணி நிமித்தம் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தொகையினை திரு.வை.முத்துவேல், குடிநீர் பணி மேற்பார்வையாளருக்கு வழங்கலாம். (ந.க.எண்.1906/2020/இ1).**

**தீர்மான எண், நாள்** **57 , நாள்.30.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சியில் 2019–2020ம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் (Solid Waste Management -2019–2020 – 9th SHPC) புதிய உரக்கிடங்கில் சேகரம் செய்யப்பட்டு குவிக்கப்பட்டுள்ள குப்பைகளை Bio Mining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ.170.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மேற்படி மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத்தின் 28.06.2019–ஆம் நாளிட்ட 635ம் எண் தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு நிர்வாக அனுமதி வழங்க வேண்டி முறை வழியாக செயற்குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

தற்பொழுது 2020–2021–ஆம் ஆண்டிற்கு கருத்துரு சமர்ப்பிக்குமாறு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 29.06.2020–ஆம் நாளிட்ட ந.க.39259/2015/ப்பி3 எண் கடிதத்தில் அறிவுறுத்தியதற்கிணங்க, 2020–21ம் ஆண்டிற்கான திருத்திய அட்டவணை விலை விகிதத்தினை பின்பற்றி மேற்படி Bio Mining முறையில் குப்பைகளை அப்புறப்படுத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள ரூ.205.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மதிப்பீட்டுத் தொகை ரூ.205.00 இலட்சத்தினை திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் முழு மானயமாக வழங்க, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **58 , நாள்.30.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.17**

இந்நகராட்சிக்குச் சொந்தமான அம்மா உணவகத்தில் அடுப்பு, பர்னர், கேஸ் லைன் மற்றும் பாய்லர் ஆகியன பழுது நீக்கம் பணி மேற்கொள்ள 11.03.2020–ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், சின்னமனூர் – ரூ.16500/–
2. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – ரூ.19000/–

**அலுவலகக் குறிப்பு:–** மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0074/2020/இ1)

**தீர்மான எண், நாள்** **59 , நாள்.30.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.18**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் எண்.TN60AW6753–க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.20000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0661/2020/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **60 , நாள்.30.06.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

*******

**பொருள் எண்.19**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.21085/பி3/2016, நாள்.31.08.2016–இன்படி 01.08.2016 முதல் 31.07.2019 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலத்திற்கு பின்பு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக கடந்த 03.06.2019ம் அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் மேற்கண்ட அலுவலகத்தில் இருந்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி ந.க.2790/2019/அ3, நாள்.03.07.2019ஆம் தேதிய கடிதப்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்திரவு கிடைக்கும் வரை, சின்னமனூர் நகராட்சி பொது மக்களின் சுகாதார நலன் கருதி இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.0576/2015/எச்1–இன்படி, 01.08.2019 முதல் 30.06.2020 வரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி உத்திரவை எதிர்நோக்கி ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது.

இந்நகராட்சியில் கொரோனா தொடர்பான பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மேலும் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை தரம்பிரித்தல், மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தல் போன்ற காரணங்களுக்காகவும், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தினந்தோறும் பொது மக்களிடமிருந்து வருகின்ற குறைகளை களையவும் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவை எதிர்நோக்கி மூன்று மாத காலத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.858, நாள்.31.03.2020–இன்படி ஏப்ரல் 2020 முதல் ஜீன் 2020 வரை ந.க.எண்.0576/2015/எச்1, நாள்.31.03.2020–இன் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி ரேட்டின்படி பணிபுரியும் நிறுவனத்தின் பணியாளர்கள் மூலம் தூய்மை பணி செய்ய நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் 30.06.2020 உடன் ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு முடிவடைவதாலும், இந்நகராட்சி பகுதியில் கொரோனா (Covid-19) தொற்று பரவல் தாக்கம் அதிகமாக இருப்பதாலும், அண்டை மாவட்டமான இம்மாவட்டத்தில் கொரோனா தொற்று அபாயம் இருப்பதாலும், மாநில அரசு முழு ஊரடங்கு அமுல்படுத்தியுள்ளதால் பொது மக்கள் நலன் கருதியும், தொற்று பரவும் அபாயத்தை தடுக்கும் பொருட்டும், மேற்கண்ட திடக்கழிவு பணியினை செயல்படுத்த வேண்டிய சூழல் உள்ளதால் அவசர அவசியம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியில் ஈடுபடவேண்டிய அவசர சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை

அவர்களின் உத்தரவு எதிர்நோக்கியும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று (01.07.2020 முதல் 30.09.2020 வரை) உள்ள மாத காலத்திற்கு அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி உத்திரவு வழங்கிய திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மன்றம். அனுமதிக்கலாம். (ந.க.எண்.0576/2015/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **61 , நாள்.30.06.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

*******